13th September 1958] [Sri Mohamed Raza Khan]

the poor students have a tendency to get such false certificates. This is, of course, most undesirable. With these observations, I withdraw my Resolution, with the leave of the House.

The Resolution was, by leave, withdrawn.

Mr. CHAIRMAN : I have to make an announcement to the House as well as the Press. Short Notice Question No. 20-A has been postponed to the 17th instant. The papers laid on the table in connection therewith should not be published or referred to, till it is answered on the floor of the House.

Sri MOHAMED RAZA KHAN : Sir, I am sorry I am making too many suggestions. May I request that the question may be taken up on the 18th instead of the 17th?

Mr. CHAIRMAN : I cannot decide it myself.

(3) OPENING OF A NEW RAILWAY ROUTE.

Sri V. V. RAMASWAMI : அவைத் தலைவர் அவர்களே, நான் எனது பேரில் இருக்கும் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரபணை செய்கிறேன்:

" This Council recommends to the Government to urge upon the Central Government to take immediate steps to open a new railway route to connect Manamadurai and Maniyachi via Mudukulathur taluk. "

The Resolution was duly seconded.

Mr. CHAIRMAN : Resolution moved—

" This Council recommends to the Government to urge upon the Central Government to take immediate steps to open a new railway route to connect Manamadurai and Maniyachi via Mudukulathur taluk."

* Sri V. V. RAMASWAMI : தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்தில், முதுகுளத்தூர் பிரதேசமும், திருநெல்வேலி ஜில்லாவையொட்டியிருக்கிற கிழக்குப் பிரதேசங்களுட மிகவும் பிற்பட்ட பிரதேசங்களாகயிருக்கின்றன. அங்கு வாழும் மக்கள் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்குப் போகவேண்டுமென்றால், தங்களுக்குள் ஒரு தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டுமென்றால், நல்ல சாலைகள் இன்னும் அமைக்கப்படவில்லை. மேலும், இவைகளுக்கிடையில் பல சிற்றாறுகளும், ஓடைகளும் இருப்பதால், வருடத்தில் பெரும்பாலும் அவைகள் மழையால் சூழப்பட்டுத் தொடர்பே இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, இவ்விரு மாவட்டங்களையும் இணைப்பதற்கு, குறிப்பாக நான் சொன்ன இந்த இரண்டு பிற்பட்ட பிரதேசங்களையும் இணைப்பதற்கு, ஒரு ரெயில் பாதை அமைக்கப்பட்டால், அங்குள்ள மக்கள் எளிதில் முக்கிய நகரங்களுக்குப் போய் வரவும் மற்ற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவும் தற்கால நவீன நாகரிக முறையைத் தெரிந்துகொள்ளவும் ஏதுவாயிருக்கும். அப்பொழுதுதான் அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்து, அவாகள் நல்ல நாகரிக மனிதர்களாக வாழ முடியும். இந்த சாதனத்தைக் கட்டாயமாக ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று அங்குள்ள மக்கள் வெகு காலமாகவே அரசாங்கத்தினிடம் முறையிட்டு வருகிறார்கள். ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளதும், திருநெல்வேலி, தூத்துக்குடியில் உள்ளதுமான பல பொறுப்

[Sri V. V. Ramaswami] [13th September 1958

புள்ள ஸ்தாபனங்களும், வியாபார சங்கங்களும் ரெயில்வே பாதை கட்டாயம் போட்டப்படவேண்டுமென்று அரசியலாரிடம் பன்முறை கூறிவந்திருக்கிறார்கள். மானாமதுரைக்கும் மணியாச்சிக்கும் இடையே இருக்கும் தூரம் 69 மைல்தான் என்று சர்வே எடுக்கப்பட்டிருக்கிறது. 1927-ல் ரெயில்வே நிர்வாகத்தால், ட்ராபிக் சர்வே எடுக்கப்பட்டிருக்கிறது. இதில் ஏற்படும் செலவினத்திற்கு என்ன வருவாய் ஏற்படக்கூடும் என்று ஆராய்ந்து பார்க்கும்போது, அதிகமாக ஏற்படாது என்று அவர்கள் நினைத்தபோதிலும், மக்களுக்கு அதனால் ஏற்படும் பலன்களைப் பார்க்கும்போது, கட்டாயம் அதைச் செய்து கொடுத்துத் தான் ஆகவேண்டுமென்று அப்பொழுதிருந்த சென்னை அரசாங்கமும் வற்புறுத்தி வந்தது. மதுரையிலிருந்து போடிநாயக்கனூருக்குப் புதிய ரெயில்வே பாதை போட்டது அங்குள்ள கள்ளர் பகுதி மக்களை இப்பொழுது நல்ல வளமுள்ளவர்களாக ஆக்கியிருக்கிறது. அதுபோன்று இந்தப் பாதையையும் போட்டுக் கொடுத்தால், நாம் அங்குள்ள மக்களுக்கு நல்ல உதவி செய்தவர்களாவோம்.

1933-ல் ஏற்பட்ட ரெயில்வே என்கொயரி போர்டு இதைப்பற்றி ஆலோசித்து ஒரு அறிக்கையை அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தது. அதில், இந்தத் திட்டத்தை நிதி நிலைமை சரியாக இருக்கும்போது எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை மேலும் வற்புறுத்தியதின் காரணத்தினால் 1934 மே 7-ம் தேதி சென்னை அரசாங்கத்திற்கு ரெயில்வே போர்டு ஒரு பதில் எழுதியிருக்கிறது. அதாவது, சமீபத்திலே அதை எடுக்க லாயக்கில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் ரெயில்வே நிர்வாக அதிகாரிகள், ரெயில்வே இலாகாக்காரர்கள், இதைப்பற்றி ஆலோசித்து மறுமுறையும் ஒரு சர்வே எடுக்கவேண்டுமென்று கருத்துத் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

மத்திய அரசாங்கத் துணை அமைச்சர் ஸ்ரீ அளகேசன் அவர்கள் விருதுநகருக்கு வந்திருந்தபோது இந்த ரெயில்வே பாதையின் முக்கியத்துவத்தைப்பற்றி எடுத்துச் சொன்னோம். அருப்புக்கோட்டையில் உள்ள கைத்தறி நெசவாளர்களும், விருதுநகர் வியாபாரிகளும் இதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். இப்பொழுது விருதுநகரிலிருந்து, அருப்புக்கோட்டை மூலம் கமுதி வழியாக மானாமதுரைக்கு ரெயில் பாதை போடத் திட்டமிருக்கிறது. அதைப்பற்றி ஆலோசிக்கப்படும் என்று சொன்னார்கள். அடுத்தாற்போல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இது சேர்க்கப்படும் என்றும் சொல்லப்பட்டது.

அமைச்சர் கனம் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் விருதுநகருக்கு வந்திருந்தபோதும், நேரிலும், விருதுநகரிலிருந்து அருப்புக்கோட்டை வழி மானாமதுரைக்கு ரெயில் பாதை போடவேண்டுமென்று அடிக்கடி சொல்லியிருக்கிறோம். அவர்கள், சமயம் கிடைக்கும்போதெல்லாம் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்துகிறோம் என்று சொல்லி ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். "ப்ரையாரிட்டீஸ் எந்த வழியில் வருகிறது என்று தெரியவில்லை. ஆயினும் அதன் முக்கியத்துவத்தைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறோம்" என்றும் சொன்னார்கள். மேலும் அத்துடன் மானாமதுரையிலிருந்து முதுகுளத்தூர் வழியாக மணியாச்சிக்கும் போகும்படியான ஒரு ரெயில் பாதை அமைத்தால் நான் குறிப்பிட்ட இரண்டு மாவட்டங்களிலுமுள்ள பிற்பட்ட பகுதிகளுக்கு நாம் உதவி செய்வதோடு, அங்குள்ள மக்களுக்கும் நாம் மிகவும் உதவி செய்தவர்களாவோம். இதற்கு இரண்டு பாதைகளும் போடப்பட்டால், அங்குள்ள மக்களுக்கு நவீன நாகரீக வாழ்க்கை நடத்துவதற்கு வழி செய்து கொடுத்தவர்களாவோம். இப்பொழுது மத்திய அரசாங்கத் துணை அமைச்சராக இருக்கும் ஸ்ரீ ராமசுவாமியவர்கள் விருதுநகர், அருப்புக்கோட்டைக்கு வந்தபோதும் இதுபற்றி வற்புறுத்தப்பட்டது. அதற்கு அவர்கள், "இதன் முக்கியத்துவத்தை அறிந்திருக்கிறேன், இதற்கு இரும்புத் தளவாடங்கள் வேண்டியிருக்கின்றன, நிலைமை சரியாகும்போது அதைப்பற்றிக் கவனிக்கலாம்", என்று சொன்னார்கள்.

"வோர்ள்ட் பாங்க்" இல் இருந்து ரெயில்வே விஸ்தரிப்புக்காக ஏதோ நம் நாட்டிற்குக் கடன் கொடுக்கப்போவதாக இன்று பத்திரிகைகளில் பார்த்தேன். முன்னால் செலுத்தவேண்டிய கடனுக்காக அது இருந்தாலும் இருக்கலாம். இருந்தாலும் இந்த முக்கியமான ரெயில்வே பாதையை மனதில் கொண்டு நமது அரசியலார், அதற்கு ஆவன செய்து மத்திய அரசாங்கத்தினிடம் எடுத்துச் சொல்லி, அப்பகுதியில் உள்ள மக்களுக்கு ஆக்கம் தேடித்தருவார்கள், தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத் தீர்மானத்தை அங்கீகரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Chairman, Government fully agree that railway facilities should be provided to cover the unserved regions in the Ramanathapuram district, particularly the Mudukulathur and Aruppukottai areas. At a Ministerial Conference convened by the Railway Ministry last year, I, on behalf of the Government, did urge the highest priority for the following six lines, although we had previously recommended as many as twelve important railway lines to be taken up :— 4-20 p.m.

1. Salem-Bangalore line.
2. Theni-Gudalur line.
3. Manamadurai-Virudunagar (via Aruppukottai) line.
4. Chinnasalem-Chingleput line.
5. Salem-Karur line.
6. Tirunelveli-Cape Comorin line.

We formulated these proposals after consulting the railway authorities and after going into the technical aspects of the question and also after taking into account the feasibility of these schemes being taken up for execution at the earliest possible time. Further this Government have examined again the question of taking up railway lines which would fulfil our immediate needs. But we are told that so far as the Second Five-Year Plan is concerned, there is no possibility of adding any new railway line over and above what the Planning Commission has agreed to. But it is our idea to urge on the Government of India to take up some of these lines at least under the Third Five-Year Plan. We are proposing to inform the Government of India again that the Virudunagar-Aruppukottai-Manamadurai to Kilakarai line must be given the highest priority as it covers a major portion of really difficult and inaccessible area We have been advised that it would be practicable to split up these proposals into two or three rather than as is suggested in the Resolution. We shall, therefore, urge on the Government of India to accord the highest priority to this—Virudunagar-Manamadurai-Aruppukottai to Kilakarai line. We also propose to urge on the Government of India to open another line connecting both Manamadurai and Tuticorin and to give this scheme also the highest priority. In the circumstances, I would request the hon. Member not to press his Resolution.

SRI V. V. RAMASWAMI : கனம் அமைச்சர் அவர்கள் சொல்லிய விவரங்களிலிருந்து எனது நோக்கம் ஈடேறும் என்று கருதுவதால் என்னுடைய தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொள்கிறேன்.

The Resolution was, by leave, withdrawn.